***விமர்சனம் :*** அந்நஜாத் நவம்பர் 2004 பக்கம் 15ல், முஸ்லிமல்லாதவர்களுக்கும் ஸலாம் கூறலாம் என்பதற்கு ஆதாரமாக 19:47வது வசனத்தில் இப்றாஹீம்(அலை) அவர்கள் தனது தந்தைக்கு ஸலாம் கூறினார்கள் என்று எழுதியிருந்தீர்கள்.

> **'இணைவைப்பவர்களை நீங்கள் சந்தித்தால் ஸலாம் கூறி (முதலில்) ஆரம்பிக்காதீர்கள். (அதாவது அவர்கள் ஸலாம் கூறினால் பதில் கூறுங்கள்)'** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : சுஹைல் இப்னு அபூசாலிஹ்,*
*நூல்கள் : முஸ்லிம், அஹ்மத்*

> **பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் (அளவிலா அருளான் நிகரிலா அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்.....) அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதருமான முஹம்மது ரோம பைஸாந்தியா மன்னர் ஹெராக்ளியஸிற்கு எழுதிக்கொண்டது. அஸ்ஸலாமு அலா மனித்தபஅல் ஹுதா. (நேர்வழியைப் பின் தொடர்ந்தோருக்குச் சாந்தி உண்டாகட்டும்).**

***அறிவிப்பவர் : அபூசுஃயான்(ரழி), நூல்கள் : புகாரீ 6260***

ஆனால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரு ஹதீஸ்களும் தங்களின் விளக்கத்திற்கு முரண்படுவதாகத் தென்படுகின்றதே! ஆகையால் தங்களின் விளக்கத்தையும் இவ்விரு ஹதீஸ்களையும் இணைத்து விளக்கமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***விளக்கம் :*** 19:47 இறைவாக்கின் அடிப்படையில் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு 'ஸலாம்' கூறுவது மேலே எடுத்து எழுதியுள்ள ஹதீஸ்களுக்கு முரண்படுகிறதே என்பதே உங்களின் சந்தேகமாகும். 19:47 இறைவாக்கிற்கு 60:4 இறைவாக்கு மேலும் விளக்கம் தருகிறது. அதில்

> **இப்றாஹீமிடமும், அவரோடு இருந்தவர் களிடமும், நிச்சயமாக உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது; தம் சமூகத்தாரிடம் அவர்கள், "உங்களை விட்டும், இன்னும் அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குகிறவற்றை விட்டும், நாங்கள் நிச்சயமாக நீங்கிக் கொண்டோம்; உங்களையும் நாங்கள் நிராகரித்து விட்டோம்; அன்றியும் ஏகனான அல்லாஹ் ஒருவன்மீதே நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரை, நமக்கும் உங்களுக்குமிடையில் பகைமையும்,**

வெறுப்பும் நிரந்தரமாக ஏற்பட்டு விட்டன" என்றார்கள். ஆனால் இப்றாஹீம் தம் தந்தையை

**நோக்கி : "அல்லாஹ்விடத்தில் உங்களுக்காக (அவனுடைய வேதனை யிலிருந்து) எதையும் தடுக்க எனக்குச் சக்தி கிடையாது; ஆயினும் உங்களுக்காக நான் அவனிடத்தில் நிச்சயமாக மன்னிப்புத் தேடுவேன்" எனக்கூறியதைத் தவிர (மற்ற எல்லாவற்றிளீம் முன் மாதிரியிருக்கிறது, அன்றியும், அவர் கூறினார்): "எங்கள் இறைவா! உன்னை முற்றிளீம் சார்ந்திருக் கின்றோம்; (எதற்கும்) நாங்கள் உன்னையே நோக்குகிறோம்; மேளீம், உன்னிடமே எங்கள் மீளுதளீம் இருக்கிறது". *அல்குர்ஆன் 60:4***

இதிலிருந்து முஸ்லிம் அல்லாதவருக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதற்கு இறைவன் தடுத்துள்ளானே அல்லாமல், அவர்களுக்கு ஸலாம் கூறுவதற்கு இப்றாஹீம்(அலை) அவர்களிடம் அழகிய முன் மாதிரி இருப்பதாகத்தான் எடுக்கவேண்டும். இல்லை என்றால் **"உங்களுக்காக நான் அவனிடத்தில் நிச்சயமாக மன்னிப்புத் தேடுவேன்"** எனக் கூறியதைத்தவிர என்று மட்டும் இல்லாமல் **"உம்மீது ஸலாம் உண்டாவதாக! மேலும் என் இறைவனிடம் உமக்காகப் பிழைப் பொறுக்கத் தேடுவேன்"** எனக் கூறியதைத்தவிர என்றே தெள்ளத் தெளிவாக இறைவன் விளக்கி இருப்பான். இதிலிருந்து முஸ்லிம் அல்லாதவருக்கு ஸலாம் சொல்வதை அல்லாஹ் தடை செய்யவில்லை என்பதை அறிய முடிகிறது.

அப்படியானால் மேலே நீங்கள் எடுத்து எழுதியுள்ள ஹதீஸ்கள் இரண்டும் ஒன்றில் இந்த 60:4 இறைவாக்கு இறங்குவதற்கு முன்னர் சொல்லப்பட்டதாக, எழுதப்பட்டதாக இருக்கவேண்டும். அல்லது இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழித்தொழிக்க கங்கணம் கட்டி முஸ்லிம்களை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த, போரிடும் மனப்பான்மை கொண்ட நிராகரிப்பாளர்கள் பற்றியதாக இருக்க வேண்டும். இது குறித்து இந்த இறைவாக்குகள் நமக்குத் தெளிவைத் தருகின்றன.

**"மார்க்க(விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான்".**

**“நிச்சயமாக அல்லாஹ் உங்களை விலக்குவ தெல்லாம் மார்க்க விஷயத்தில் உங்களிடம் போர் செய்து உங்களை உங்கள் இல்லங்களை விட்டும் வெளியேற்றி, நீங்கள் வெளியேற்றப் படுவதற்கு உதவியும் செய்தார்களே, அந்தகையவர்களை நீங்கள் நேசர்களாக ஆக்கிக் கொள்வதைத்தான் எனவே, எவர்கள் அவர்களை நேசர்களாக்கிக் கொள்கிறார்களோ அவர்கள் தாம் அநியாயம் செய்பவர்கள்”. *அல்குர்ஆன் 60:8,9***

எனவே முஸ்லிம்களுடன் நல்லெண்ணத்துடனும், நட்பு ரீதியாகவும் பழகும் முஸ்லிம் அல்லாதவருக்கு ஸலாம் சொல்வதை மார்க்கம் தடைசெய்யவில்லை என்பதை அறியவும்.

**************************

***விமர்சனம் :*** அந்நஜாத் 2004 டிசம்பர் இதழில் 22ம் பக்கத்தில் சூரியன், பூமி, சந்திரன் ஒரே நேர்கோட்டில் வந்தால் அமாவாசை எனவும், அது அடுத்த மாதத்தின் ஆரம்பம் என பொருள் படும்படியும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

சூரியன், பூமி, சந்திரன் ஒரே நேர் கோட்டில் வந்தால் அது சந்திர கிரகணம் எனவும்,

சூரியன், சந்திரன், பூமி ஒரே நேர்கோட்டில் வந்தால் அது சூரிய கிரகணம் எனவும் **சயின்ஸ்** புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சூரிய கிரகணம் அமாவாஸையிலும்; சந்திர கிரகணம் பௌர்ணமியிலும் நிகழக்கூடியவை.

ஆகவே, அமாவாஸைக்கும் கிரகணங்களுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்க வேண்டுகிறேன். மேலும், அமாவாஸையை எவ்வாறு கணக்கிடுவது என்ற விபரமும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

***விளக்கம் :*** சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் சந்திரன் நேர் கோட்டில் வந்து சூரிய வெளிச்சம் பூமியில் விழாமல் தடுப்பதை சூரிய கிரஹணம் என்கிறோம். அதற்கு மாறாக சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் பூமி நேர் கோட்டில் வந்து சூரியனிலிருந்து சந்திரனில் படும் வெளிச்சத்தை தடுக்கும் நிலையை சந்திர கிரகணம் என்கிறோம்.

சூரிய கிரகணம் அமாவாசையில் இடம் பெறும்; சந்திர கிரகணம் பௌர்ணமியில் ஏற்படும். அமாவாசை

சூரிய கிரகணம் அமாவாசையில் இடம் பெறும், சந்திர கிரகணம் பௌர்ணமியில் ஏற்படும். அமாவாசை பகலில் ஏற்பட்டு சூரியனிலிருந்து பூமிக்கு வரும் வெளிச்சம் தடுக்கப்படும் போது அதைப் பார்க்க முடியும். அதை சூரிய கிரகணம் என்கிறோம். அமாவாசை மாதா மாதம் குறிப்பிட்ட ஒரே இடத்தில் ஏற்படாது. மாறி மாறி இடம் பெறும். எனவே இரவு நேரங்களில் அமாவாசை ஏற்படும் போது, சூரியனிலிருந்து பூமிக்கு வரும் வெளிச்சம் சந்திரனால் தடுக்கப்பட்டாலும் அதைப் பார்க்க முடிவதில்லை.

சந்திரன் சஞ்சரிக்கும் சுற்றுப்பாதையின் தூரத்தை சந்திரனின் ஓட்ட வேகத்தால் வகுக்கும் போது ஏற்படும் கால அளவே ஒரு அமாவாசைக்கும் அடுத்த அமாவாசைக்கும் இடைப்பட்ட காலமாகும். அது சுமார் 29.5 நாட்கள் பிடிக்கும். மேலதிக விபரங்களுக்கு

**www:moonobservation.com**

**www:starlight.demon.co.uk/mooncalc**

**www:ummahmah.org.uk/ildl/mooncalc.html** ஆகிய இணையதளங்களில் பார்க்கவும்.

*************************

***விமர்சனம் :*** **“நீ சுப்ஹு தொழுதபின் எவருடனும் பேசுவதற்கு முன் ‘அல்லாஹும்ம அஜிர்னீ மினன்னார்” என்று ஏழு முறை ஓதினால் (இறைவா! நரகிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக!) அன்றே நீ இறந்து விட்டால் நரகிலிருந்து காப்பாற்றப் படுகிறாய். அது போல் மஃரிப் தொழுத பின் எவருடனும் பேசுவதற்கு முன் ‘அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஜன்னத் அல்லாஹும் அஜிர்னீ மினன்னார்’ (இறைவா! சுவர்க்கத்தை உன்னிடம் கேட்கிறேன்; நரகிலிருந்தும் என்னைக் காப்பாற்றுவாயாக!) என்று கூறி, அன்றிரவே நீ இறந்து விட்டால் நரகிலிருந்து காக்கப்படுவாய்”** என்று நபி(ஸல்) அவர்கள் எனக்குக் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : முஸ்லிம் இப்னுல் ஹரிஸ்(ரழி),*
*நூல்கள் : அஹ்மத், அபூதாவூத்*

மேற்குறிப்பிட்ட ஹதீஸை தாங்கள் அந்நஜாத் 2004 ஜூன் பக்கம் 27,28ல் ஸஹீஹ் என்ற அமைப்பில் பிரசுரித்திருந்தீர்கள். ஆனால் முஸ்லிம் பெண்மணி 2003 ஆகஸ்ட் பக்கம் 12ல், இதன் இரண்டாவது அறிவிப்பாளர் **“அல் ஹாரிஸ் பின் முஸ்லிம்”** என்பவர் யார் என்றே அறியப்படாதவர் என இமாம் தாரகுத்னீ அவர்கள குறிப்பிடுவதாகவும், மேலும் இவருடைய பெயரும் இவரின் தந்தையின் பெயரிலும் கருத்து வேறுபாடு நிலவுவதாகவும் குறிப்பிட்ட இந்த ஹதீஸ் பலஹீனமானது என்று விளக்கியிருக்கின்றார்கள். ஆகையால் எங்களுக்கு இதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளபடியால், இதன் சரியான நிலையை தாங்கள் விளக்கித் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

***விளக்கம் :*** முஸ்லிம் பெண்மணியில் குறிப்பிட்டுள்ளபடி இந்த ஹதீஸ் பலஹீனமானதுதான். கவனக்குறைவுக்கு வருந்துகிறோம். சுட்டிக் காட்டியமைக்கு நன்றி.

*************************

***விமர்சனம் :*** நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா(ரழி) அவர்கள் அறிவிப்பதாகவும் : **“நிச்சயமாக எவரேனும் ஒருவன் தனது மனைவிக்கு நெருப்பாலான ஒரு வளயத்தை அணிவிக்க விரும்புகிறாரோ அவர் தங்கத்தாலான வளையம் ஒன்றை அவளுக்கு அணிவிக்கட்டும். இன்னும் எவரேனும் ஒருவர் தனது மனைவிக்கு நெருப்பாலான சங்கிலி ஒன்றை அணிவிக்க விரும்புகிறாரோ அவர் தங்கத்தாலான சங்கிலியை அணிவிக்கட்டும். (இன்னுமொரு அறிவிப்பில் அவர் ஓர் வளையலை அணிவிக்கட்டும்) எனினும் வெள்ளியை நீங்கள் பயன்படுத்துங்கள். எனவே அதன் மூலம் நீங்கள் பயன்படுங்கள்.** எனக் கூறினார்கள்.

***நூல்கள் : அபூ தாவூத் 2/199, அஹ்மத் 2/378***

நபி(ஸல்) அவர்களின் மனைவியான உம்மு ஸலமா(ரழி) அவர்கள் அறிவிப்பதாகவும் : **தனது கழுத்தில் தங்கத்தாலான மாலைகளை மாட்டியிருந்தார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள், அவர்களை விட்டும் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். அப்போது அவர்கள் இதனது அழகை நீங்கள் பார்க்க வேண்டாமா? எனக் கேட்க, நபி(ஸல்) அவர்கள் உனது அழகை விட்டு நான் புறக்கணிக்கிறேன் என்றார்கள். (அறிவிப்பாளர் கூறுகிறார் : உங்களில் ஒருவர் வெள்ளியினாலான காதுப்பூ ஒன்றை எடுத்து மஞ்சல் நிறம் பூசி அணிந்து கொண்டால் அது தீங்கிழைக்காது** என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக சிலர் கருதுகின்றனர்).

***நூல் : அஹ்மத்***

நபி(ஸல்) அவர்கள் ஆயிஷா(ரழி) அவர்களின் கையில் தங்கத்தால் பூசப்பட்ட இரண்டு வளையல்களைக் கண்டு **‘உன்னை விட்டும் அவைகளைக் கழற்றி (எறிந்து) விட்டு வெள்ளியினாலான இரண்டு வளையல்களை அணிந்துகொள். அவைகளை மஞ்சல் நிறத்தால் நிறம் பூசிக்கொள்’** என்றார்கள்.

***நூல்கள் : நஸாயீ, கதிப்***

மேலே குறிப்பிட்டுள்ள ஹதீஸ்களை நோக்கும் போது பெண்களுக்கும் தங்கம் அணிவது கூடாது என்று விளங்கக்கூடியதாக தென்படுகின்றதே! ஆகையால் பெண்கள் தங்கம் அணியலாம் என்று நேரடியாக

வேறும் ஹதீஸ் இருந்தால் அதையும், இதற்கான விளக்கத்தையும் அந்நஜாத்தில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***விளக்கம் :*** பெண்கள் தங்கம் அணிவதை மறுத்துக்கூறும் அனைத்து ஹதீஸ்களும் பலகீனமானவையே. ஆண்களுக்கு பட்டும், தங்கமும் ஹராம் (கூடாது); பெண்களுக்கு ஆகுமானது என்ற நபிமொழி ஆதாரப்பூர்வமானது. பெண்கள் அணியும் தங்க நகைகளுக்கு வருடாவருடம் ஜகாத் கொடுப்பது கடமை. இல்லை என்றால் நரக வேதனை உண்டு (அமீர் இப்னு ஷுஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வழி அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதிஃ என்ற நபி மொழியும் ஆதாரப்பூர்வமானதாகும்.